**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE COURT, HOSUR**

S.C. Case No : 48/2020

Deposition of witness for Prosecution : Pw 6

Defence :

Name : Muthukumar
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed and on date 02.11.2021 in accordance with the provision with the Act of 1983.

முதல் விசாரணை :

நான் பேகுபள்ளி மகாலட்சுமிலேஅவுட்ல் குடியிருக்கிறேன். எதிரியை தெரியும். அவர் எனதுஅண்ணண் வீட்டிற்கு பின்புறம் குடியிருக்கிறார்.அ.சா.1 ஐ தெரியாது. 05.10.2019 அன்று என் அண்ணண் வீட்டிற்கு அருகே பிரச்சனை என்று தகவல் சொன்னார்கள். நான் வந்து பார்த்த போது என் அண்ணண் வீட்டிற்கு அருகில் யாரும் இல்லை. நான் வந்த போது கம்பெனி கேட்டிற்கு முன்பு சிப்காட் போலிசார் நின்று கொண்டிருந்தார்கள். சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு போலிசார் எழுதிக்கொண்டிருந்தார்கள். என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான்.அந்த பார்வை மகஜர் அரசு தரப்பு சான்றாவணம் 4. போலிசார் என்னை விசாரித்தார்கள். கேட்டிற்கு முன்பு செடிகள் இருந்தது.அங்கு ஒருஅருவாள் இருந்தது. அது ரத்தக்கறையுடன் இருந்தது. அந்த அருவாளை போலிசார் கைப்பற்றினார்கள்.அப்பொழுது என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல்மகஜரில் எனது கையெழுத்து உள்ளது.அந்த கைப்பற்றுதர் மகஜர் அரசு தரப்பு சான்றாவணம் -5. நீதிமன்றத்தில் உள்ள சா.போ.1 ஐ தான் போலிசார் கைப்பற்றினார்கள். அதன்பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. போலிசார் வந்த போது கருணாகரன் என்பவர் என்னுடன்இருந்தார். என்னுடன் கருணாகரன் என்பவரும் கையெழுத்துப்போட்டார்.

குறுக்கு விசாரணை:

எனக்கு தமிழ் படிக்கத் தெரியும். நான் போலிசாரிடம் 2 கையெழுத்துப்போட்டேன். நான் கையெழுத்துப்போட்ட ஒரு ஆவணம் வரைபடம் என்று சொன்னர்கள்.மற்றொன்று கைப்பற்றப்பட்டது என்று சொன்னார்கள். என் முன்னிலையில் சா.போ.1 ஐ தான்எதிரி பயன்படுத்தினார் என்று போலிசாரிடம் யாரும் சொல்லவில்லை. என் முன்னிலையில் சா.போ.1 எவ்வாறு உள்ளது என்ற விவரங்களை போலிசார் எழுதினார்கள். நான் கையெழுத்துப்போட்ட ஒரு பேப்பரில் படம் இல்லை.நான் படம் போட்ட பேப்பரில் கையெழுத்துப் போடவில்லை. கையெழுத்துப்போட்ட பேப்பரில் முதல்பத்தியில் எனது பெயர் விவரங்கள் எழுதப்பட்டுள்ளது. 2வது பத்தியில் என்ன நடந்தது என்று எழுதப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் அழைப்பாணையில் உள்ள கையெழுத்துஎன்னுடையது தான்.அரசு தரப்பு சான்றாவணம் 4 பார்வை மகஜரில் உள்ள கையெழுத்துக்கும் வித்யாசமாக உள்ளது என்று சொன்னால் சரிதான். பதட்டத்தில் போட்டேன். என்னுடன் கையெழுத்துப்போட்டவரின் அப்பா பெயர் தெரியாது. அவர் எழில் நகரில் உள்ளார். என் அண்ணண் வீட்டில் இருந்து 4 வீடு தள்ளி குடியிருக்கிறார். என்னை விசாரித்த காவல் அதிகாரி 2 ஸ்டார்அணிந்த சீருடை அணிந்திருந்தார். சா.போ1 தான் அங்கு இருந்தது. போலிசார்அதை எடுத்தார்கள். போலிசார் சம்பவ இடத்திற்கு 12.30 மணிக்கு ஒரு முறையும் 2 மணிக்கு ஒரு முறையும் வந்தார். முதல் கையெழுத்து 12.30 மணிக்கு வாங்கினார்கள். அருவாள் எடுக்கும் போது இன்னொரு கையெழுத்து வாங்கினார்கள்.அப்பொழுது மணி 2 இருக்கும். இடைப்பட்ட காலத்தில் போலிசார் அங்கிருந்தார்கள் இருந்தார்களா என்று எனக்குத் தெரியாது. நான் கம்பெனிக்குள் சென்றுவிட்டேன். வரைபடத்தில் கையெழுத்துப்போட்டபோது 3 அடி 4 அடி தூரத்தில் சா.போ.1 இருந்தது. கத்தி புல்மேல் இருந்ததால் தென்படவில்லை.மறுபடியும் வந்து தேடி எடுத்தார்கள். வெட்டியதால் கத்தி எங்கே என்று போலிசார் தேடினார்கள். நான் அடிப்பட்ட நபர்களை மருத்துவமனையில் போய் பார்க்கவில்லை. போலிசார் சம்பவ இடத்தில் எத்தனை ஆவணங்கள் தயார் செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. நான் கையெழுத்துப்போட்ட பேப்பர்கள் கையெழுத்தால் எழுதப்பட்டவை.மற்ற ஆவணங்களை பற்றி எனக்குத் தெரியாது. போலிசார் என்னை தனியாக விசாரிக்கவில்லை. நான் தனியாக வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. என் முன்னனியில் கருணாகரன் தவிர வேறு யாரும் நான் கையெழுத்துப்போட்ட பேப்பரில் கையெழுத்துப்போடவில்லை. அரசு தரப்பு சான்றாவணம் 4 மற்றும் 5ல் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது அல்ல என்று சொன்னால்சரியல்ல. அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அழைப்பாணையில் உள்ள கையெழுத்தும் அரசு தரப்பு சான்றாவணம் 4 மற்றும் 5 ஆகிய ஆவணங்களில் உள்ள கையெழுத்து வேறுபாடாக உள்ளதால் அது நான் போட்ட கையெழுத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல. பதட்டத்தில் போட்டுள்ளேன். உண்மையில் சா.போ.1 சம்பவ இடடத்தில் இருந்திருந்தார் பார்வை மகஜர் தயார் செய்த் போதே அதை கைப்பற்றியிருப்பார் என்றும் 2 மணி நேரம் கழித்து சா.போ1 ஐ கைப்பற்றியதாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு காலை 10.30-10.45க்கு சண்டை நடந்து அ.சா.1 ஐ வெட்டி விட்டதாகவும் அவர் மருத்துவமனையில் இருப்பதாகவும் சொன்னார்கள்.தகவல் கணேஷ் என்வர்

சொன்னார். ரமேஷ் தகவல் சொன்ன விவரத்தை போலிஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை. மாலை 4 மணிக்கு நான் மருத்துவமனைக்கு சென்றேன். போலிசார் சம்பவத்திற்கு வந்த போதுஅ.சா.1டம் வாக்குமூலம் ்வாங்கியுள்ளோம் என்று சொல்லவில்லை.சம்பவ இடத்திற்க வந்த போது போலிசார் வழக்கு பதிவு செய்திருந்தார்களா என்று எனக்குத் தெரியாது. நான் கையெழுத்துப்போட்ட ஆவணங்களில் குற்ற எண் சட்டப்பிரிவு குறிப்பிடப்பட்டிருந்ததா என்று எனக்குத் தெரியாது.